**மே – 28**


# TNPSC துளிகள்

- குடியரசுத் தலைவர் திரு.இராம்நாத் கோவிந்த் கும்மனம் இராஜசேகரன் என்பவரை மிசோரம் மாநிலத்தின் ஆளுநராகவும், பேராசிரியர்.காந்திலால் என்பவரை ஒடிசா மாநிலத்தின் ஆளுநராகவும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 153ன் கீழ் நியமித்துள்ளார்.
  - கும்மனம் இராஜசேகருக்கு முன்னர் மிசோரம் மாநிலத்தின் ஆளுநராக லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு) நிர்பய் ஷர்மா இருந்தார்.
  - பீகார் மாநிலத்தின் ஆளுநரான சத்யபால் மாலிக் அவர்களுக்கு ஒடிசா மாநில ஆளுநர் பொறுப்பு கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. தற்போது ஒடிசா மாநிலத்திற்கு பேராசிரியர் காந்திலால் முழுநேர ஆளுநராக செயல்படுவார்.
- மத்திய உள்துறை அமைச்சகம், பெண்கள் பாதுகாப்பு மீதான அக்கறைகள் அதிகரித்து வருவதற்கு மத்தியில், பெண்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை விரிவாக குறிப்பிட்டுக் காட்டும் நோக்கில் பெண்கள் பாதுகாப்புப் பிரிவை உருவாக்கியுள்ளது. இந்தப் பிரிவானது, பெண்கள் தொடர்புடைய அமைச்சகங்கள், துறைகள் மற்றும் மாநில அரசுகளுடன் கூட்டிணைந்து பெண்கள் பாதுகாப்பின் அனைத்து அம்சங்களையும் கையாளும்.
- நாட்டின் மிகவும் மதிப்பு வாய்ந்த மற்றும் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப அவுட்சோர்ஸிங் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS), ரூ.7 லட்சம் கோடி மதிப்பிலான சந்தை மூலதன (Market Capitalisation-Cap) மைல்கல்லை அடைந்து, இந்நிலையை அடைந்த முதல் இந்திய நிறுவனமாக உருவெடுத்து வரலாறு படைத்துள்ளது.
- இந்தியாவைச் சேர்ந்த 24 வயதாகும் அர்ஜீன் வாஜ்பாய் உலகின் மூன்றாவது மிக உயர்ந்த மலைப் பகுதியான கஞ்சன்சங்காவில் வெற்றிகரமாக ஏறி சாதனை படைத்துள்ளார். இது இப்பகுதியை அடைவதற்கான இவரின் இரண்டாவது முயற்சியாகும். நொய்டாவில் உள்ள தனது வீட்டை விட்டு வெளியேறிய 50 நாட்களில் இவர் இதை படைத்துள்ளார்.
- ரோமேனியா நாட்டிற்கான தற்போதைய தூதரான திரு.தங்லுரு டார்லாங் (IFS:1988) இப்பொறுப்புடன் சேர்த்து மால்டவோ குடியரசிற்கான இந்தியத் தூதராகவும், அல்பேனியா நாட்டிற்கான இந்தியத் தூதராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது தங்குமிடம் ரோமேனியோவின் பச்சரெஸ்ட்டில் உள்ளது.
- அக்ராவிற்கான (கானா குடியரசின் தலைநகரம்) தற்போதைய இந்தியத் தூதரான திரு.பிரதீப் குமார் குப்தா, மாலி குடியரசிற்கான அடுத்த இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மும்பை கடல்பகுதியின், கடற்கரை மேம்பாட்டுப் பகுதியில் “பிரஸ்தன்” எனும் பாதுகாப்புப் பயிற்சியை இந்திய கடற்படை நடத்தியது. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் இப்பயிற்சியானது, இந்திய கடற்படையின் மேற்குக் கடற்படைத் தலைமையகத்தால் நடத்தப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## 5-வது இந்தியா-CLMV வணிக மாநாடு

- 5-வது இந்தியா-CLMV வணிக மாநாடு (கம்போடியா, லாவோஸ், மியான்மர், வியட்நாம்), கம்போடியா நாட்டின் பினோம் பெண்ணில் (Phnom Penh) நடைபெற்றது.
- இந்திய மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் மற்றும் கம்போடியாவின் வர்த்தகத் துறை அமைச்சகம் ஆகியவை கூட்டிணைந்து இம்மாநாட்டை நடத்தின.
- இந்திய தொழிலகக் கூட்டமைப்பானது (Confederation of Indian Industry –CII) இந்நிகழ்ச்சியின் நிறுவன கூட்டுப் பங்காளர் ஆகும்.
- இந்தக் கூட்டமானது, மேம்பாட்டிற்காக CLMV நாடுகளின் பொருளாதாரங்களைப் பற்றிய சிறந்த புரிதலை ஏற்படுத்துவதற்காக ஒரு வாய்ப்பை வழங்குவதோடு, இந்தியாவுடன் பொருளாதார ஈடுபாட்டை (Economic Engagement) மேம்படுத்துவதற்காக அதிக வாய்ப்பையும் வழங்குகிறது.
- CLMV மண்டலமானது, அனைத்து ASEAN நாடுகளுக்கான இந்தியாவின் நுழைவு வாயிலாகக் கருதப்படுகிறது. மேலும், இம்மண்டலமானது இந்தியாவிற்கு ASEAN நாடுகளின் மிகப்பெரிய சந்தைகளின் அணுகலையும் வழங்குகிறது.




## IMDயின் போட்டித் திறன் தர வரிசை

- மேலாண்மை மேம்பாட்டிற்கான சர்வதேச நிறுவனத்தினால் (International Institute for Management Development - IMD) வெளியிடப்படும் தொகுக்கப்பட்ட வருடாந்திர போட்டித்திறன் தரவரிசையில் இந்தியா ஒரு படி முன்னேறி 44-வது இடத்தைப் பிடித்துள்ளது. அமெரிக்கா இத்தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது.
- அமெரிக்கா, பொருளாதார செயல்பாடு மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றில் சிறப்பான நிலையைக் கொண்டிருப்பதால் உலகளவில் மிகவும் போட்டிக்குரிய

பொருளாதார நாடாக விளங்குகின்றது. அமெரிக்காவைத் தொடர்ந்து ஹாங்காங் (2), சிங்கப்பூர் (3), நெதர்லாந்து (4) மற்றும் சுவிட்சர்லாந்து (5) ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

- முதல் பத்து இடங்களில் இடம் பெற்ற மற்ற நாடுகளாவன: டென்மார்க் (6), ஐக்கிய அரபு அமீரகம் (7), நார்வே (8), சுவீடன் (9), கனடா (10).
- 14 ஆசிய நாடுகளுக்கான இத்தரவரிசைப்பட்டியலில், இந்தியா, 12-வது மிகவும் போட்டிக்குரிய பொருளாதார நாடாக உள்ளது.
- இதற்கிடையில் சீனா (13) கடந்த பத்தாண்டுகளில் இத்தரவரிசையில் தொடர்ந்து முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. 2014 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை பத்து இடங்கள் முன்னேறியுள்ளது.
- சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள IMD வணிகப் பள்ளியைச் சேர்ந்த ஆராய்ச்சிக் குழுவான IMD உலகப் போட்டித்திறன் மையம், இத்தரவரிசையை 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் வெளியிட்டு வருகிறது.
- இந்த ஆண்டு 63 நாடுகள் இத்தரவரிசையில் இடம் பெற்றுள்ளன. சிப்ரஸ் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் இத்தரவரிசையில் முதல் முறையாக இடம் பெற்றுள்ளன.

## இந்தியா-நெதர்லாந்து புரிந்துணர்வு ஒப்பந்தம்

- மத்திய நீர்வளம், நீர்மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகம் மற்றும் நெதர்லாந்து நாட்டின் உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆகியவற்றிற்கிடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக நெதர்லாந்து நாட்டின் பிரதமர் இந்தோ-டச் கங்கை மன்றத்தைத் தொடங்கியுள்ளார்.
- நெதர்லாந்து நாடானது, சர்வதேச சூரிய ஒளி கூட்டணியில் 64-வது நாடாக கையெழுத்திட்டுள்ளது.
- காய்கறிக்களுக்கான முதல் இந்தோ-டச் சிறப்பு மையம் (Indo-Dutch Centre of Excellence - CoE) மகாராஷ்டிரா மாநிலத்தின் பாரமதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்தியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

## பட்ரட்டு மிகப்பெரிய வெப்ப மின்னாற்றல் திட்டம்

- தேசிய வெப்ப மின்னாற்றல் கழகத்தின் (NTPC) நிலக்கரி அடிப்படையிலான பட்ரட்டு மிகப்பெரிய வெப்ப மின்னாற்றல் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு (2400 MW) ஜார்க்கண்ட் மாநிலத்தில் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- இந்தத் திட்டமானது, ஜார்க்கண்ட் மாநில அரசு மற்றும் NTPCயின் துணை நிறுவனமான பட்ரட்டு வித்யுத் உத்பன்டன் நிகாம் லிமிடெட் ஆகியவற்றுக்கு இடையிலான 74 : 26 என்ற அளவிலான நிதியளிப்புடன் கூடிய கூட்டுச் செயல்பாட்டுத் திட்டமாகும்.
- இத்திட்டத்தின் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றிற்கான ஒப்பந்தம் BHEL நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம், 85% அளவிலான மின்னாற்றலை ஜார்க்கண்ட் மாநிலத்திற்கு வழங்குவதோடு பிரதம மந்திரி சகஜ் பிஜ்லி ஹர்கார் யோஜனா (சவுபாக்யா)

திட்டத்தின் கீழ் ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள வீடுகளுக்கு 24x7 மின்சாரம் வழங்கப் படுவதை உறுதி செய்கிறது.

- இத்திட்டமானது, ESP, FGD மற்றும் Nox உமிழ்வு கட்டுப்பாட்டு அமைப்புகள் போன்ற புதிய வெளியீட்டு வரைமுறைகளுடன் ஒத்திசைகிறது.

## வங்க தேச இல்லம்

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வங்கதேசப் பிரதமர் திருமதி.ஷேக் ஹசீனா ஆகியோர் மேற்குவங்க மாநிலத்தின் சாந்தி நிகேதனில் உள்ள விஷ்வபாரதி பல்கலைக்கழகத்தில் வங்கதேச இல்லத்தை தொடங்கி வைத்தனர்.
- சாந்திநிகேதனில் உள்ள வங்கதேச இல்லமானது, அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தைக் கொண்டிருப்பதோடு நான்கு பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.
- மேற்குவங்க மாநிலத்தின் சாந்திநிகேதனில் உள்ள மத்தியப் பல்கலைக்கழகமான விஷ்வபாரதி, இரவீந்திரநாத் தாகூரால் 23 டிசம்பர் 1921ல் நிறுவப்பட்டது. தாகூரால் இந்த மத்தியப் பல்கலைக்கழகம் விஷ்வபாரதி என அழைக்கப்பட்டது. விஷ்வ பாரதி என்பதன் பொருள் இந்தியாவுடனான உலகின் தொடர்பு என்பதாகும் .
- இப்பல்கலைக்கழகத்தின் வேந்தர் இந்தியப் பிரதமர் ஆவார்.




## ASEAN - இந்தியா திரைப்பட விழா

- ASEAN - இந்தியா திரைப்பட விழா புதுதில்லியில் மே 25 முதல் மே 30, 2018 வரை நடைபெறுகிறது.
- 25 ஆண்டுகால இந்தியா - ASEAN உறவுகளை நினைவு கூர்வதற்கான தொடர்ச்சியான நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக இவ்விழா இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தால் (ASEAN பன்னாட்டுப் பிரிவு) நடத்தப்பட்டது.
- போட்டிக்குரியதற்ற நிகழ்ச்சியான இந்த திரைப்பட விழாவின் மேற்கோளானது “திரைப்படங்கள் வழியான நட்பு” என்பதாகும்.

- படத்தயாரிப்பில் புதிய போக்குகளுக்கான அணுகலை வழங்குவதன் மூலம், கலாச்சாரப் பரிமாற்றத்திற்கான ஒரு வாகனமாக செயல்படுவதை இவ்விழா நோக்கமாகக் கொண்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## 2018 உபெர் கோப்பை

- ஜப்பான் நாட்டின் பெண்கள் பேட்மிண்டன் அணி 2018 உபெர் கோப்பையை 1981 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக வென்றுள்ளது. 1981ஆம் ஆண்டு IMPACT ஸ்டேடியத்தில் 3-0 என்ற அளவில் ஜப்பான் அணி (இப்போட்டியை நடத்திய தாய்லாந்தை) வீழ்த்தியது.
- உலகின் ஒற்றையர் பிரிவில் இரண்டாம் நிலையிலுள்ள அக்கனே யாமாகுச்சி, உலகின் நான்காம் நிலையிலுள்ள இரட்ச்சன் நோக் இண்டநோனை 21-15, 21-19 என்ற அளவில் வீழ்த்தி ஜப்பானிய பட்டத்தை வென்றுள்ளார்.
- இரட்டையர் ஜோடியான யூகிஃபுகுஷிமா மற்றும் சயாகா ஹிரோட்டா ஆகியோர் ஜப்பானிற்காக தங்கம் வென்றனர்.
- நோஜோமிர் ஒக்குகாரா, நிட்சாவோன் ஜிந்தாபோலை வீழ்த்தி வெற்றி பெற்றார்.
- இதற்கு முன்னர் ஜப்பான், இந்தக் கோப்பையை, 1966, 1969, 1972 மற்றும் 1978 ஆகிய ஆண்டுகளில் வென்றுள்ளது. சீனா இப்பட்டத்தை 14 முறை வென்றுள்ளது.
- உபெர் கப் என்பது பெண்களுக்கான உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியாகும்.
- தேசிய அணிகளுக்கான போட்டியளவில் ஒலிம்பிக் போட்டிற்குப் பிறகான இரண்டாவது கவுரவமான இப்போட்டி இதுவேயாகும்.




## முனிச் கிராண்ட் பிரிக்

- ஜெர்மனி நாட்டின் முனிச் நகரில் நடைபெற்ற கிராண்ட் பிரிக் போட்டியில் முன்னாள் உலக துப்பாக்கி சுடுதல் சேம்பியனான தேஜஸ்வினி சவந்த் தங்கம் வென்றுள்ளார்.
- தேஜஸ்வினி, முனிச் நகரில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டியில் புரோன் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றிருந்தார். இவர் சமீபத்தில் கோல்டுகோஸ்டில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டிகளில் தங்கம் வென்றார்.
  - தங்கம் - தேஜஸ்வினி சவந்த் (இந்தியா)

- சில்வர் - அஞ்சும் மவுட்கில் (இந்தியா)
- வெண்கலம் - ஒலிவியா ஹாஃப்மேன் (ஆஸ்திரேலியா)

# முக்கிய தினங்கள்

## உலக தைராய்டு விழிப்புணர்வு தினம் - மே 25

- உலக தைராய்டு விழிப்புணர்வு தினம் - மே 25 அன்று, தைராய்டைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தைராய்டு நோயினைத் தடுத்தல் மற்றும் அதற்கான மருத்துவ சிகிச்சைப் பற்றிய கல்வியளித்தல் ஆகியவற்றிற்காகவும் கொண்டாடப்படுகிறது.
- 2008 ஆம் ஆண்டில், ஐரோப்பிய தைராய்டு சங்கம் (ETA), அமெரிக்க தைராய்டு சங்கம் (ATA) ஆகியவை இணைந்து, முதன் முறையாக, தைராய்டு நாளங்கள், அதன் எண்ணற்ற மற்றும் கண்ணில் புலப்படாத அறிகுறிகளுக்காக ஒரு தினத்தை (மே 25) முதல் முறையாக உலக அளவில் அர்ப்பணித்தன.
- இத்தினம் முதல் முறையாக 2009 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அது முதல், ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுவதோடு, சர்வதேச தைராய்டு விழிப்புணர்வு வாரம் இந்த முக்கியமான தினத்தை ஒட்டி வருகிறது.




## காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - மே 25

- காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் மே 25 அன்று, கடைபிடிக்கப்படுகிறது. இதே தினம், 1983ஆம் ஆண்டு ரொனால்டு ரீகனால் அமெரிக்காவின் காணாமல் போன குழந்தைகளுக்கான தேசிய தினமாக அறிவிக்கப்பட்டது.

- காணாமல் போன மற்றும் சுரண்டலுக்குள்ளான குழந்தைகளுக்கான சர்வதேச மையம் மற்றும் காணாமல் போன மற்றும் சுரண்டப்பட்ட குழந்தைகளுக்கான அமெரிக்காவின் தேசிய மையம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் உலகளாவிய காணாமல் போன குழந்தைகள் பிணைய அமைப்பு (GMCN - Global Missing Children's Network) 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும், மே 25ஆம் தேதியன்று GMCN உறுப்பினர்கள் காணாமல் போன குழந்தைகளின் சர்வதேச தினத்திற்கு மரியாதை செலுத்துவர்.




---------------